பேரவையின் முன்புள்ள கேள்வி —

*"குடியரசுத் தலைவர் அவர்கள், இந்திய அரசியலமைப்பின் **3-வது** பிரிவின்படி, அட்டவணையில் விவரிக்கப்பட்டிருக்கும் 'சென்னை மாநில (பெயர் மாற்ற) மசோதா, 1968' என்ற தலைப்புள்ள நாடாளுமன்ற மசோதாவை, இந்தப் பேரவையினரின் கருத்துக்களை அறியும்பொருட்டு இப் பேரவைக்கு அனுப்பியுள்ளாராகையால்,

இந்த மசோதாவில் 'தமிழ் நாட்' என்ற சொற்கள் எங்கெங்கு வருகின்றனவோ அங்கெல்லாம் 'தமிழ் நாடு' என்ற சொற்களை அமைக்க பரிந்துரைத்து, இந்தத் திருத்தத்திற்கு உட்பட்டு மேற்படி மசோதாவில் கண்டுள்ள செயற் குறிப்புகளை இந்தப் பேரவை ஏற்றுக்கொள்வதாக தனது ஆன்ற கருத்தினை அறிவிக்கின்றது.

மற்றும், இம் மசோதா நாடாளுமன்றத்தில் இயன்ற விரைவில் அறிமுகம் ஆகி, சட்டமாக நிறைவேற்றப்படவேண்டும் என்றும் இந்தப் பேரவை விரும்புகின்றது."

மூலத் தீர்மானம், திருத்தப்பட்டபடி, பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஒருமனதாக, ஆரவாரத்திறகிடையே, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இத்துடன் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுறுகின்றன. 19—8—1968 திங்கள்கிழமை காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது. பி. ப. 1–30

7. பேரவையின்முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

+ 160. Notification issued with G.O. Ms. No. 2586, Public (Services-A), dated the 7th December 1967, in regard to an amendment to the Madras Public Service Commission Regulations, 1954, published at pages 759 to 768 of Part I of *the Fort St. George Gazette,* dated the 9th June 1954, as subsequently amended. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India.]

161. Notification issued with G.O. Ms. No. 924, Revenue, dated the 29th April 1968, in regard to the determination of land revenue in respect of all lands in Chinnakalrayanmalai inam estate in Attur taluk of Salem district. [Laid on the Table of the House under section 73 (5) of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963).]

B. Reports, Notifications and other papers.

+ 31. Speech of Hon. Thiru V. R. Nedunchezhiyan, Minister for Education and Industries, initiating the discussion in the Madras Legislature on the Annual Financial Statement for 1968–69 and the Supplementary Financial Statement for 1967–68 of the Madras State Electricity Board (English and Tamil).

---

* தீர்மானத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பு 216-ம் பக்கத்தில் இரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.